செ.வெ.எண்.54 நாள்: 19.08.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கல்லூரி பேராசிரியர்கள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் சுவச்சதான் "1.0" ஆன்லைன் போட்டிகளில் பங்கேற்க பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு-**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக சாரல் அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் சுவச்சதான் "1.0" ஆன்லைன் போட்டிகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் அதிக அளவில் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரி பேராசிரியர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.08.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டம் வரும் அக்டோபர் மாதத்திற்குள் திறந்த வெளி மலம் கழித்தலற்ற மாவட்டமாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்திய அளவில் மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம் மூலமாக தூய்மை பாரத திட்டத்தினை செயல்படுத்தும் போது காணப்படும் 6 முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் சுவச்சதான் "1.0" ஆன்லைன் போட்டிகளை நடத்தி இணைய வழி தேடல் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்க பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஸ்டார்ட் அப்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் அதிக அளவில் கல்லூரி மாணவ, மாணிவிகளை இப்போட்டியில் பங்கேற்க செய்ய வேண்டும்.

- மழை மற்றும் வெள்ளம் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் செயல்படுத்தக்கூடிய கழிப்பறை தொழில்நுட்பங்கள்
- கழிப்பறை பயன்பாட்டினை உறுதிசெய்தல் அல்லது கண்காணிப்பு செய்தல் தொடர்பான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- மக்கள் மத்தியில் கழிப்பறை பயன்பாடு மற்றும் சுகாதாரம் குறித்ததான மனமாற்றம் அல்லது பழக்க-வழக்கங்கள் மாற்றம் ஏற்படுத்தக்கூடிய தொழில்நுட்பத் தீர்வுகள்
- பள்ளி கழிப்பறைகளின் உபயோகம் மற்றும் பராமரிப்பினை மேம்படுத்தும் அரிய முறைகள் அல்லது கண்டுபிடிப்புகள்
- மாதவிடாய் சுகாதார மேலாண்மைக்கான புதிய முறைகள் அல்லது கண்டுபிடிப்புகள்
- விரைவில் மலத்தினை சிதைவு செய்யக்கூடிய புதிய முறைகள் அல்லது கண்டுபிடிப்புகள் - உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

தீர்வுகள் எளிதில் செயல்படுத்தக்கூடியதாகவும், அதிக பராமரிப்பு தேவைப்படாததாகவும், User Friendly ஆகவும் இருத்தல் வேண்டும்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் http://innovate.mygov.in/swachhathon-1-0 என்ற தளத்தில் உடனடியாக பதிவு செய்ய வேண்டும். ஆலோசனை குறிப்புகள் தொழில்நுட்பங்கள் மேற்கண்ட இணையதளத்தில் மட்டுமே பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்ய 25.08.2017 கடைசி நாளாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இப்போட்டியில் அதிக அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்க வேண்டும். பேராசிரியர்கள் இது குறித்து மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், திருநெல்வேலி மாவட்டம், அக்டோபர் மாதத்திற்குள் திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற மாவட்டமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனிநபர் இல்ல கழிப்பிடம் கட்ட மத்திய, மாநில அரசு ரூ.12,000/- மானியம் வழங்கப்படுகிறது. மானியத்தைக் காட்டிலும் தற்போது ரூ.1000 முதல் ரூ.3000 வரை கூடுதல் செலவாகிறது. கட்டிட பொறியியல் கல்லூரிகள் (Civil Engineering College) தனி நபர் கழிப்பிடங்களை அரசு மானியத்தில் சிறந்த தொழிநுட்பம் மற்றும் தரமான வகையில் கட்டித்தர முன்வந்தால் வாய்ப்பு வழங்கப்படும். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் திடக்கழிவு மேலாண்மையில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு மேலாண்மையில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த போட்டிகளும் விரைவில் நடத்தப்படவுள்ளது. சுவச்சதான் “1.0” ஆன்லைன் போட்டிகளில் இந்திய அளவில் சிறந்த தொழில்நுட்பங்களுக்கு பரிசுகள் வழங்குவதுடன் அத்தொழில்நுட்பங்கள் இந்தியா முழுவதும் செயல்படுத்தும் வாய்ப்புள்ளது. எனவே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவிகள் இப்போட்டிகளில் அதிகம் பங்குபெறும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சத்தியநாதன், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜலிங்கம், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்திமுருகன் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.